வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் (பொ) செயல்முறைகள்

ந.க.எண். 1878/ஆ1/2025, நாள். 02/07/2025

.....

பொருள் பள்ளிக் கல்வி – தமிழ்நாடு மேல்நிலைக் கல்விப் பணி – 01.01.2025 உள்ளவாறு அரசு / நகராட்சி மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர் பதவி உயர்விற்குத் தகுதி வாய்ந்த முதுகலைப் பாட ஆசிரியர்கள் / முதுகலை மொழி ஆசிரியர்கள் / உடற்கல்வி இயக்குநர் (நிலை–1) / அரசு உயர்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்கள் – 03.07.2025 அன்று நடைபெறும் பதவி உயர்வு கலந்தாய்வில் கலந்துக் கொள்ள தெரிவித்தல் – சார்பு

பார்வை
1. அரசாணை (நிலை) எண். 14, பள்ளிக் கல்வி (பக5(1)) துறை நாள். 30.01.2020
2. அரசாணை (நிலை) எண். 176, பள்ளிக் கல்வி (பக5(1)) துறை நாள். 17.12.2021
3. சென்னை –6, தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.14360/ டபிள்யு 1/இ1/2025, நாள். 01.07.2025
4. சென்னை –6, தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.036752/ டபிள்யு 1/இ1/2025, நாள். 01.07.2025

.....

பார்வை 3ல் காணும் பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகளின் படி 01.01.2025 உள்ளவாறு அரசு / நகராட்சி மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர் பதவி உயர்விற்குத் தகுதி வாய்ந்த முதுகலைப் பாட ஆசிரியர்கள் / முதுகலை மொழி ஆசிரியர்கள் / உடற்கல்வி இயக்குநர் (நிலை–1) / அரசு உயர்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்கள் பெயர் பட்டியல் பெறப்பட்டுள்ளது.

பார்வை 4–ல் காணும் பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகளில், அரசு மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்கள் பதவி உயர்வு கலந்தாய்வு 03.07.2025 அன்று நடத்திட தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, அரசு மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர் பதவி உயர்விற்கு விண்ணப்பித்த தகுதி வாய்ந்த முதுகலைப் பாட ஆசிரியர்கள் / முதுகலை மொழி ஆசிரியர்கள் / உடற்கல்வி இயக்குநர் (நிலை–1) / அரசு உயர்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்கள் கீழ்காணும் படி நடைபெறும் கலந்தாய்வில் தவறாமல் கலந்துக்கொள்ளுமாறு தெரிவிக்கப்படுகிறது.

**அரசு மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர் பதவி உயர்வு கலந்தாய்வு**
**நாள் – 03.07.2025 (வியாழக்கிழமை) நேரம் – காலை 9.00 மணி**
**இடம் – முதன்மைக் கல்வி அலுவலகம்,**
**பி. பிளாக், 3–வது தளம், மாவட்ட ஆட்சியர் வளாகம்,**
**வேலூர் மாவட்டம்**

இணைப்பு – அரசு மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்கள்
பதவி உயர்விற்கு தேர்ந்துதோர் பெயர் பட்டியல்

முதன்மைக் கல்வி அலுவலர்(பொ),
வேலூர்.

பெறுநர்
சார்ந்த அரசு உயர் / மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்கள்,
வேலூர் மாவட்டம்

நகல்.
1. தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.
2. மாவட்டக் கல்வி அலுவலர், (இடைநிலைக் கல்வி) வேலூர் மாவட்டம். (இவ்வலுவலக மின்னஞ்சல் மூலமாக)
3. சார்ந்த ஆசிரியர்கள், (தலைமையாசிரியர் மூலமாக)